**OS No.70/2018**

PW 1 - கண்ணன்

நாள் 23.07.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என்னுடைய பிராதில் நான் குறிப்பிட்ட சொத்துக்களுக்கு நான்கு மால்கள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழியில் என் அப்பாவுடன் பிறந்த பெண் மக்களை போடவில்லை என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்த பெண் மக்கள் 3 நபர்கள். முறையே அன்னபூர்ணம், பாண்டியம்மாள் ஆகியோர்கள் மற்றொருவர் பெயர் தெரியவில்லை.

என் அப்பா எப்போது இறந்தார் என்று எனக்குத் தெரியாது. என் அப்பாவிற்கு என் அம்மா இரண்டாவது தாரம் ஆவார். என் அம்மாவின் பெயர் ஆறுமுகம் ஆகும். என் அம்மாவிற்கு இரண்டு பிள்ளைகள் கண்ணன் ( நான் ) சண்முகப்பிரியா ஆகியோர்கள். என் சகோதரி சண்முகப்பிரியாவிற்கு பூர்வீக சொத்தில் ஏதும் பட்டா உண்டா என்றால் இல்லை.

தாவா கிராமத்தில் நத்தம் சர்வே எண் 472/41 ஆனது என் சகோதரியின் பெயரில் உள்ளதா என்றால் இல்லை என் அம்மா வழி சொத்து ஆகும். என் அப்பா என் அம்மாவை அவருடைய முதல் தாரம் உயிருடன் இருந்த போதே திருமணம் செய்து கொண்டாரா என்றால் முதல் தாரம் புத்திசுவாதீனம் இல்லாத நிலையில் என் அம்மாவை திருமணம் செய்து கொண்டார். அவரைபராமரிப்பு செய்ய வேண்டி என் அம்மாவை திருமணம் செய்து கொண்டார்.

என் அப்பாவின் முதல் தாரம் நல்ல மனநிலையில் தான் இருந்தார் என்றும், அவர் எப்போதும் புத்தி சுவாதீனம் இல்லாமல் இல்லை என்றும் என் தாயாரை சேர்த்து கொண்டு பூர்வீக சொத்துக்களில் வீட்டை

மட்டும் வாங்கிக்கொண்டு தனியாக சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அந்த வீடு தான் பூர்வீக வீடு என்றும், அது சண்முகப்பிரியாவிற்கு பட்டா தரப்பட்டது என்றால் சரியல்ல. அத்துடன் எனக்கும் அந்த வீட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்று என் அப்பா விலகிக்கொண்டார் என்றால் சரியல்ல.

என் அய்யா முத்துசேர்வை எப்போது இறந்தார் என்பது எனக்குத் தெரியாது. நான் தாவா பிராதில் குறிப்பிட்டுள்ள 1, 2 இலக்க சொத்துக்களை என் அய்யா முத்து சேர்வை தான் உயிருடன் இருந்த காலத்திலேயே ஒத்தி மற்றும் ஈடு – க்கு வைத்து கடன்கள் வாங்கி என் தகப்பனாருடன் உடன் பிறந்த 3 சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்த விசயம் தெரியுமா என்றால் தெரியாது.

1 , 2 இலக்க சொத்துக்களை ஒத்திக்கு வாங்கிய நபர்கள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பங்காளிகள் சேர்ந்து நானும், என் சித்தப்பாவும் சேர்ந்து தான் அனுபவம் செய்து வருகிறோம். 2 ம் பிரதிவாதி தவமணி வெளிநாட்டிற்கு சென்று சம்பாத்தியம் செய்தாரா என்றால் செய்தார் அவர் குடும்பத்திற்கு செலவு செய்தார். 1, 2 இலக்க சொத்துக்களை ரூபாய் 415000/– கொடுத்து திருப்பினார் என்றால் சரியல்ல.

1, 2 இலக்க சொத்துக்களின் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. 1, 2 இலக்க சொத்துக்களில் நான்கு பக்கங்களில் யார் யார் உள்ளார்கள் என்று கேட்டால் எனக்குத் தெரியாது. சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லாததால் நான்கு பக்கங்களில் யார் உள்ளார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை என்றால் சரியல்ல. என் சித்தப்பா ராமசந்திரன் மற்றும் சுந்தரலிங்கம் ( 5 , 6 பிரதிவாதிகள் ) மேற்படி 1, 2 இலக்க சொத்துக்களுக்கு 2 ம் பிரதிவாதி ரூபாய் 415000/– கட்டி திருப்பியதில் தாங்கள் அந்த ஈவு, கடனை திரும்ப கொடுக்கும் வரை 2 ம் பிரதிவாதியே 1 , 2 இலக்க சொத்துக்களை அனுபவித்து வரும்படி சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3 ம் இலக்க சொத்தான வீடு மற்றும் 4 இலக்க சொத்தை பொறுத்து எனது தாயாரை என் தந்தை திருமணம் செய்வதற்கு முன்பே 4, 5, 6 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து தனித்தனியே அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள 3 , 4 இலக்க சொத்துக்களில் வீடு எதுவும் இல்லை. நான் பிராது சொத்தில் காண்பித்துள்ள 4 வது இலக்க சொத்தில் மற்றொரு வழக்கு மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 198/2021 என்று நடைபெற்று வருகிறது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

4 வது இலக்க சொத்தில் என் தகப்பனாருக்கு உரிய பாகத்தை அவர் அப்போதே விற்றுவிட்டார் என்றால் சரியல்ல, விற்கவில்லை. 4 வது இலக்க சொத்தில் வேறு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து அது சம்பந்தமாக என் சித்தப்பாமார்கள் வழக்கு நடத்தி வருகிறார்கள் அதனால் நான் பொதுவான அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கை தவறாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் உரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

-Sd-
District Munsif,
Manamadurai.